DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 28/2024**

அ.சா.4

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | வேலம்மாள் | Caste: | |
| Husband Name: | ரவிகணேஷ் | Calling: | பெட்டிக்கடை |
| Village: | ஒன்டிவீரன் நகர்,இராமேஸ்வரம் | Religion: | |
| Taluk: | இராமேஸ்வரம் | Age: | 42 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 29.09.2025

( 1,3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி காணொலி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.)

**முதன்மை விசாரணை**

நான் இராமேஸ்வரம் ஒன்டிவீரன் நகரில் வசித்து வருகிறேன். பெட்டிக்கடை வீட்டோடு சேர்த்து வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.2 என் நாத்தனார். அ.சா.1 என் நாத்தனாரின் மகன். அ.சா.3 தினேஷ் என் மகன். சாட்சி பிரியங்கா என் நாத்தனார் மருமகள். சாட்சி ரவிகணேஷ் என் கணவர். எதிரிகளை தெரியும். எங்கள் தெருவிற்கு பக்கத்து தெருவில் வசிப்பவர்கள். கடந்த 02.04.2024ம் தேதி இரவு 9.30மணியளவில் அ.சா.1 சிவா வீட்டுக்கு அருகில் உள்ள ரோட்டில் சக்திவேல் என்பவரது வீட்டின் முன்பாக நின்று அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார். என் நாத்தனார் மகன் சிவா அசிங்கமாக இங்கு நின்று கொண்டு பேசாதீர்கள் என்று சொன்னான். 1ம் எதிரி விஜய் பக்கத்தில் இன்னொரு நபர் நின்று கொண்டிருந்தார். அந்த நபரின் பெயர் விவரம் தெரியாது. ஆனால் அடையாளம் காட்ட முடியும். அந்த நபரும்

அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார். அ.சா.1 சிவா அசிங்கமாக பேசாதீர்கள் என்று சொன்னதால் சிவாவுக்கும் 1ம் எதிரி விஜய் மற்றும் அவனுடன் இருந்த நபருக்கும் கைகலப்பு ஆகிவிட்டது. அருகில் இருந்த நாங்கள் ஓடிச்சென்று விலக்கிவிட்டோம். 3ம் எதிரி நம்புவேல் வந்து விலக்கிவிட்டார். 2ம் எதிரி விஜய் சங்கரும் வந்து விஜயோடு சேர்ந்துகொண்டு சிவாவை அடித்தார்கள். அ.சா.1 சிவாவுக்கு வலது தோள்பட்டை, மூக்கு, இடது நெஞ்சு, முதுகு பகுதிகளில் கத்தி கீறல் காயங்கள் இருந்ததைத்தான் நாங்கள் பார்த்தோம். யார் கத்தியை வைத்து கீறினார்கள் என்பதை நான் பார்க்கவில்லை. ஆனால் கத்தி சம்பவ இடத்தில் கிடந்தது. எதிரிகள் மூவரும் சவுக்கு காட்டுப்பக்கம் ஓடிவிட்டார்கள். என்னால் கத்தியை அடையாளம் காட்ட முடியும். நாங்கள் என் நாத்தனார் மகன் சிவாவை ஆட்டோவில் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றோம். இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நாங்கள் இந்து பட்டியல் இனத்தை சேர்ந்த சக்கிலியர் வகுப்பை சேர்ந்தவர்கள். எதிரிகள் மூவரும் பிறப்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த நாடார் வகுப்பை சேர்ந்தவர்கள். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நாங்கள் குடியிருக்கும் குடியிருப்புக்கும் எதிரிகள் குடியிருக்கும் குடியிருப்புக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் கூப்பிடும் தூரம். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரோடு சக்திவேல் வீட்டிற்கு எந்த திசையில் செல்கிறது என்றால் மேற்கு. அந்த ரோடு தென்வடல் ரோடு. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரமும் இடமும்

இருட்டான இடம், நேரம் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான், தமிழரசி, பிரியங்கா ஆகிய மூவரும் செல்வதற்கு முன்பாகவே எதிரிகள் ஓடிவிட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் போனவுடன்தான் ஓடினார்கள். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது சிவா காயம்பட்டு கீழே கிடந்தார் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு சம்பவ இடத்திலிருந்து மருத்துவனைக்கு அனுப்பி வைத்தோம் என்றால் இரவு 10-10.30 இருக்கும். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது சிவா இரத்த வெள்ளத்தில் கீழே கிடந்தார், கத்தியும் அங்கு கிடந்ததா என்றால் ஆமாம். போலிசார் எத்தனை மணிக்கு வந்து சம்பவ இடத்தில் இருந்த கத்தியை எடுத்தார்கள் என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும் அ.சா.1 என் நாத்தனாரின் மகன் என்பதாலும் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)